1993 மார்ச் 30]

173—

செந்தட்டியாபுரம் அருகில் பாலம் கட்டுதல்.

*10246—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

வாசுதேவநல்லூர் தொகுதி, செந்தட்டியாபுரம் அருகில் பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், வாசுதேவநல்லூர் தொகுதி செந்தட்டியாபுரம் அருகில் பாலம் கட்டுவதற்கு போதுமான நிதி ஆதாரங்கள் இல்லாததால் இது பற்றி செயற்குறிப்பு தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (1) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. 29-3-1993 அன்று அவையில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உறுப்பினர்களுடைய பாதுகாப்பு பற்றிய பிரச்சினை குறித்து இங்கே பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். எங்களுடைய உறுப்பினர்கள் தொடர்ந்து தாக்குதலுக்கு இலக்காகி இருக்கிறார்கள். அவையிலே சுதந்திரமாகச் செயல்பட முடியாமல்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் ஏதோ ஒரு வேண்டுகோள் வைக்கவேண்டும் என்று விரும்புவதாக திரு. ஆர். சிங்காரம் அவர்களும், திரு. பன்னீர்செல்வம் அவர்களும் என்னிடத்திலே வைக்கலாம். வித்தார்கள். அந்த வேண்டுகோளை நீங்கள் மேற்கொண்டு இந்த நேரத்தில் விவாதத்திற்குச் செல்வது நல்லதல்ல.